## (ஈ) வேலை நிலையும், தொழில் உறவுகளும்

குறுகியகாலச் செயற் படுத்துத் திட்டத்திற்கிணங்க இலங்கையில் உள்ள வேலை நிலை, வேலை இன்மை நிலை, குறைவு வேலை நிலை, ஆகியவை சம்பந்தமாக ஒரு அளவீடு சர்வதேசத் தொழிற் தாபனத்தாலும் தொழிற் திணைக்களத்தாலும் 1959ம் ஆண்டில் நடாத்தப்பட்டது. 1959ம் ஆண்டில் வேலையற்ருேரின் எண்ணிக்கை ஏறக்குறைய 375,000 என இவ் அளவீடு தெரிவித்தது. அத்துடன் கிராமப்பகுதிகளிலுள்ள தொழிலாளர்களில் 35 சதவீதமானேரும், பட்டினப்பகுதியிலுள்ள தொழிலாளர்களில் 20 சதவீதமானேரும், காலபோகங்களில் வேலையற்றவர்களாக அல்லது நிலையற்ற வேலையுடையவர்களாக இருந்தார்கள். (1)

இலங்கையிலுள்ள வேலை, வேலையின்மை, ஆகியவை சம்பந்தமான வருடாந்த விபரங்கள் கிடையாது. இவ் விபரங்கள் கிடையாத நிலையில், நாட்டிலுள்ள வேலையின்மையின் வருடாந்த நடமாட்டங்களை ஓரளவில் அறிவதற்குத் தொழில் இணைப்புக் காரியாலயங்களிற் பதிவுபட்டோரின் எண்ணிக்கைபற்றிய தரவுகள் உதவுகின்றன. 1961ம் ஆண்டுமுடிவில் தொழில் இணைப்புக்காரியாலயங்களிற் பதிவுப்பட்டோரின் எண்ணிக்கை முந்திய வருடத்திற்குரிய தொகையிலும் பார்க்க 0.1 சதவீதத்தால் அதிகரித்தது. இவர்களின் தொகை 1962ம் ஆண்டிற் சிறு அளவால் அதிகரித்துக்கொண்டு வந்தது. எனவே, 1962ம் ஆண்டு மார்கழி மாத முடிவில் உள்ளபடி இப்பதிவுபட்டோர்களின் எண்ணிக்கை 152,209 ஆக விளங்கியமை, 1961ம் ஆண்டு மார்கழி மாத முடிவிற்குரிய 151,265 உடன் ஒப்பிடத்தக்கது. தொழில் இணைப்புக் காரியாலயங்களிற் பதிவு பட்டோரின் எண்ணிக்கை 1962ம் ஆண்டின் 2ம் காற்பகுதியில், ஆகக்குறைந்த மட்டத்தில் இருந்தது. 1962ம் ஆண்டின் போது தொழில்நுட்பப் பயிற்சி பெற்ருேர், இலிகிதர் ஆகிய பதிவாளர்களின் எண்ணிக்கை நிதானமாக அதிகரித்தது, ஆதலின் ஆண்டு முடிவில் இவர்களின் எண்ணிக்கை 1961ம் ஆண்டு மார்கழி மாத முடிவில் இருந்த தொகையிலும் பார்க்க 22·4 சதவீதத்தால் உயர்ந்ததாக விளங்கியது. தேர்ச்சி பெற்ருேரினதும் அரைத் தேர்ச்சி பெற்ருேரினதும் எண்ணிக்கை ஒப்பியல்பில் மாற்றமின்றி விளங்கியது. ஆனல், தேர்ச்சி பெருத பதிவாளர்களின் எண்ணிக்கை இவ்வாண்டில் நிதானமாக வீழ்ச்சியடைந்து, முந்தைய ஆண்டிற்குரிய தொகையிலும் பார்க்க 8·1 சதவீதத்தாற் குறைந்தது.

கடந்த சில ஆண்டுகளில் வேலையிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையும், ஒவ்வொரு தொகுதியிலுள்ள பதிவாளர்களின் மொத்த எண்ணிக்கையில் வேலையிலமர்த்தப்பட்டோரின் சதவீதமும், பின்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது.

---

1. குறுகிய காலச் செயற் படுத்துத் திட்டம், 1962, பக்கம் 89.

### அட்டவணை II ஈ-1

### வேலையில் அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையும் பதிவு செய்தோரின் மொத்த எண்ணிக்கையில் இவர்களின் சதவீதமும்

| வருடம் | தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோரும் இலிகிதரும் | % | தேர்ச்சி பெற்றோர் | % | அரைத் தேர்ச்சி பெற்றோர் | % | தேர்ச்சி பெறாதவர்கள் | % | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1953 .. | 1528 | 18·2 | 669 | 10·4 | 1371 | 10·0 | 2820 | 12·2 | 6388 | 12·4 |
| 1954 .. | 1097 | 9·4 | 879 | 11·1 | 922 | 5·7 | 4660 | 17·0 | 7558 | 11·9 |
| 1955 .. | 2166 | 14·9 | 1064 | 12·5 | 1187 | 5·9 | 3791 | 13·6 | 8208 | 11·6 |
| 1956 .. | 1913 | 11·9 | 845 | 8·6 | 1565 | 6·1 | 4162 | 12·1 | 8485 | 9·9 |
| 1957 .. | 1176 | 6·3 | 709 | 5·3 | 1180 | 3·8 | 3053 | 6·4 | 6118 | 5·5 |
| 1958 .. | 1827 | 9·2 | 800 | 5·9 | 1006 | 3·1 | 2251 | 4·4 | 5884 | 5·0 |
| 1959 .. | 1667 | 8·0 | 1045 | 7·5 | 1275 | 3·8 | 3218 | 5·4 | 7205 | 5·6 |
| 1960 .. | 1400 | 5·3 | 771 | 4·6 | 1247 | 3·6 | 4744 | 6·5 | 8162 | 5·4 |
| 1961 .. | 1259 | 4·6 | 631 | 3·5 | 964 | 2·8 | 2794 | 3·9 | 5648 | 3·7 |
| 1962* .. | 1263* | 3·7 | 498* | 2·9 | 808* | 2·3 | 2315* | 3·5 | 4855* | 3·2 |

மூலம்: தொழிற் திணைக்களம்.

* தற்காலிகமானவை.

இவ்வாண்டில் வேலையிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை, அண்மையில் உள்ள கடந்த ஆண்டுகளில் உள்ளதிலும் பார்க்கக் குறைவானதாகும். வேலையிலமர்த்தப்பட்டோரில் மிகக்கூடிய தொகையானோர் தேர்ச்சி பெறுதோரின் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகும். பதிவு செய்தோர்களின் எண்ணிக்கையில் வேலையில் அமர்த்தப்பட்டோரின் சதவீதம், தொழில்நுட்பப் பயிற்சி பெற்றோர், இலிகிதர் ஆகியோர் சம்பந்தப்பட்ட வரையிற்தான் மிகக்கூடியதாக விளங்கியது. இத்தொகுதியைச் சேர்ந்த பதிவாளரில் 3·7 சதவீதமானோர் வேலையிலமர்த்தப்பட்டனர். இதற்கு இரண்டாவதாக, தேர்ச்சிப்பெறாத பதிவாளர் அமர்த்தப்பட்டனர்.

#### தொழில் உறவுகள்

வேலை நிறுத்தங்கள் பற்றிய விபரங்கள், தொழில்–முகாமை உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்களை ஓரளவு எடுத்துக்காட்டுகின்றன. வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை, அவற்றில் ஈடுபட்ட தொழிலாளரது எண்ணிக்கை, அதன்பயனாக இழக்கப்பட்ட ஆள்வேலை நாட்கள் முதலியவற்றை, பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

### அட்டவணை II ஈ-2

### வேலை நிறுத்தங்கள்

| வருடம் | தோட்டங்கள் | | | ஏனைய தொழில்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | ஈடுபட்ட தொழிலாளர்கள் | இழக்கப்பட்ட ஆள் வேலை நாட்கள் | எண்ணிக்கை | ஈடுபட்ட தொழிலாளர்கள் | இழக்கப்பட்ட ஆள் வேலை நாட்கள் |
| 1958 .. | 123 | 39,372 | 340,632 | 96 | 42,713 | 399,228 |
| 1959 .. | 177 | 47,318 | 352,095 | 71 | 42,453 | 460,141 |
| 1960 .. | 123 | 42,528 | 259,948 | 37 | 4,839 | 15,139½ |
| 1961 .. | 90 | 29,223 | 317,866 | 39 | 38,013 | 170,372 |
| 1962* .. | 130 | 39,658 | 178,972 | 38 | 21,654 | 726,356 |

மூலம்: தொழிற் திணைக்களம்.

*தற்காலிகமானவை.

அண்மையிலுள்ள ஆண்டுகளிற் தோட்டப்பகுதிகளில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை மிகக் குறைவானதாக விளங்கிய 1961ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1962ம் ஆண்டு*, தோட்டப்பகுதிகளில் நடைபெற்ற வேலைநிறுத்தங்கள் அதிகரித்தன. ஏனைய பகுதிகளில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை ஓரளவில் மாற்றமடையவில்லை. ஆயினும் தொழிற் சங்கங்களை உடைய தொழிலாளர்களின் தொகையிற் பெரும்பகுதியானோர் வேலைசெய்யும் தோட்டப்பகுதியிலேயே ஆகக்கூடிய வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. தோட்டத் தொழிலாளர்களில் ஏறக்குறைய 67·5 சதவீதமானோர் தொழிற்சங்கங்களில் அங்கத்தினராக இருக்கின்றனர். தொழிற்சங்கங்களில் அங்கத்தினர்களாக இருக்கும் சகல தொழிலாளர்களில் இவர்களின் எண்ணிக்கை 58·2 சதவீதமாக உள்ளது. 1962ம் ஆண்டிற் தோட்டங்களிலும் ஏனைய தொழில்களிலும் நடைபெற்ற வேலைநிறுத்தங்கள் முறையே 130 ஆகவும் 38 ஆகவும் இருந்தமை, முந்தைய ஆண்டுக்குரிய 90 ஞேடும் 39 தோடும் முறையே ஒப்பிடத்தக்கன. தோட்டத்துறையில் வேலை நிறுத்தங்களில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையும் முந்தைய ஆண்டிலும் பார்க்க கூடுதலாக இருந்தது. ஆனல் அவ்வேலைநிறுத்தங்களால் இழக்கப்பட்ட ஆள் வேலை நாட்கள் குறைவுற்றன. ஏனைய தொழிற்களில் நடைபெற்ற வேலைநிறுத்தங்களில் ஈடுபட்ட ஊழியர்களின் எண்ணிக்கை கூடியதாக இருந்ததோடு, வேலைநிறுத்தங்களும் முந்தைய ஆண்டுகளிலும் பார்க்க நீடித்த நாட்களுக்கு நடைபெற்றதாக இருந்தன. எனவே இழக்கப்பட்ட ஆள் வேலைநாட்கள் 1961ம் ஆண்டிற்குரிய 1,70,372லிருந்து 1962ம் ஆண்டு 7,26,356க்கு அதிகரித்தன. 1962ம் ஆண்டில் இழக்கப்பட்ட ஆள் வேலை நாட்களில், 5,30,767 ஆள்வேலை நாட்கள் துறைமுக ஊழியர்களின் வேலைநிறுத்தத்தினுல் மட்டும் இழக்கப்பட்டன. வங்கி ஊழியர்களின் வேலை நிறுத்தத்தினுல் இழக்கப்பட்ட ஆள்வேலை நாட்கள் 1,65,850 ஆகும்.

தொழிற் திணைக்களம் செய்த பாகுபாட்டின்படி வேலை நிறுத்தங்களுக்காகக் கொடுக்கப்பட்ட காரணங்களை நோக்குமிடத்து, தோட்ட விதிகள், ஒழுக்கக்கட்டுப்பாடு, வேலையாட்களின் ஒழுக்கங்கள் முதலியவை மொத்த வேலைநிறுத்தங்களில் 36·9 சதவீதமானவைக்குக் காரணமாகவும், கூலி கொடாமை, கூலி கொடுப்பதிற் சுணக்கம் போன்ற கூலித்தகராறுகள் 9·2 சதவீதமானவைக்குக் காரணமாகவும் இருந்தன. இக்காரணங்களைப் பற்றிய வேலைநிறுத்தங்கள் பெரும்பாலும் தோட்டங்களில், ஏற்பட்டவையாகும். வேலைநீக்கம், அல்லது வேலை இழப்பு முதலிய காரணங்கள் மொத்த வேலை நிறுத்தங்களில் 22·0 சதவீதமானவைக்கும், கூலி உயர்வுபற்றிய கோரிக்கைகள் 0·7 சதவீதமானவைக்கும் காரணங்களாக விளங்கின.

---

*தற்காலிகமானவை